# அனல்

01.05.2017

புதுமலர்: 14 இதழ்: 03 வைகாசி - ஆனி




சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

பக்கம்: 36 ஆண்டு: 2017 ஆசிரியர்: வே.மகாராஜா

# பொருளடக்கம்

01. அனலின் சத்தம்
02. கதையும் கற்றதும் - பொறுத்திரு
03. வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல் - பாகம் 11b
04. தாய்க்கு ஒரே மகன்
05. பெண்கள் பக்கம் - உன் சாயல் என்ன?
06. நற்செய்திப்பகுதி - சிலுவை சாவின் அடையாளம்
07. தேவ பணியாளர் பட்டறை
08. சிறுவர் வட்டம் - உங்கள் எதிராளி
09. அருட்பணியாளர் சரிதை - கிறிஸ்டியன் பிரடரிக் ஸ்வார்ட்ஸ், வில்லியம் பூத்
10. குறுக்கெழுத்துப்போட்டி - 79
11. வினா விடை - 81
12. அனலின் ஆன்மீக விருந்து
13. பின்வாங்காதே



## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய முகவரி:



**சீயோன் ஜெபக்குழு,**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**



**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

## மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
**The Editor "Anal",**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**



***T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk***

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

# அனலின் சத்தம்

வானாதி வானங்களுக்கு மேலாக தம் சிங்காசனத்தைக் கொண்ட, சர்வ வல்லமை உடைய தேவன் குமாரன் மூலமாக எமக்குத் தம்மைக் காண்பித்தார். குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும் நீங்கள் ஒவ்வொருவரும் அவருடைய பிள்ளை களாகும்படியான சலாக்கியம் கொடுக்கப்பட்டிருக் கின்றது. யோவான் 3:16 சொல்கிறது: "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்".

தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதற் குரிய பெரிய வெளிப்பாடே கிறிஸ்து தான். இது மனிதன் மீது தேவனுக்கிருக்கும் மிகப்பெரிய அன்பின் வெளிப்பாடு. அவருடைய அன்புக் கீடாக எதை நாம் கொடுக்க முடியும். அருமை யான வாசக உள்ளங்களே, உங்கள் வாழ்வை தூய்மையாக்கிய இயேசுவுக்கு வாழ்வை அர்ப்பணியுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

- ஆசிரியர் -




**போ**ல் என்கிற சிறிய பையன் இருந்தான். அவன் பிறந்து சில நாட்களில் அவனது தாய் இறந்துவிட்டார். எனவே அவன் கேட்கும் எந்தப் பொருளையும் அவனது அப்பா வாங்கிக் கொடுத்தார். அவன் விரும்பிய எதையும் அவர் தடுக்க வில்லை. அவன் தாய் இல்லாத பிள்ளை எனவே எதிலுமே அவன் வருத்தப்படக் கூடாது, ஏமாற்றமடையக்கூடாது என்பதில் அவர் கவனமாய் இருந்தார். அவன் இவ்வாறு வளர்ந்து பாடசாலை கல்வியை நிறைவு செய்து பல்கலைக்கழகத்திற்கு செல்ல ஆரம்பித்தான். அவன் பல்கலைக்கழகத்திற்கு செல்லும் போது அவன் அங்கே அணிவதற்கு புதிய ஆடைகள் அதுவும் மிகவும் விலையுயர்ந்த ஆடைகள், மோட்டார் சைக்கிள், என அவன் கேட்க அனைத்தையும் அப்பா வாங்கிக் கொடுத்தார். அவனது தகப்பனின் அளவற்ற அன்பு அவன் மேல் இருந்தது. இவ்வாறு அவன் தனது பல்கலைக் கழக கல்வியை நிறைவு செய்யும் தருணத்தில் தன் நண்பர்களுடன் சேர்ந்து பொருட்கள் சிலவற்றை வாங்குவதற்காக கடைக்கு சென்றான். அவ்வாறு அவன் செல்லும் வழியில் கார்களை விற்பனை செய்யும் ஓர் இடத்தைக் கண்டான். அங்கே பலவிதமான கார்கள் பலவிதமான நிறங்களில் அழகாக வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவன் அவைகளைப் பார்க்கிற போது அங்கே இருந்த கார்களில் விலையுயர்ந்த ஆடம்பரமான கார் ஒன்றைக் கண்டான். இப்போது அவனுடைய உள்ளத்தில் எப்படியாவது இந்தக் காரை நான் வாங்கிவிட வேண்டும் என்று எண்ணினான்.

உடனே அவன்வீட்டுக்குச் சென்று அப்பாவைப் பார்த்து; அப்பா கார் விற்பனை செய்யும் அந்த கடையில் இருக்கிற அந்த அழகிய காரை எனக்கு வாங்கித்தரவேண்டும். நான் எனது பட்டப்படிப்பை நிறைவு செய்து எனது பட்டமளிப்பு விழா நடைபெறும் போது நீங்கள் எனக்கு அந்தக் காரை கண்டிப்பாக வாங்கித்தர வேண்டும் என்று அன்புக்கட்டளையிட்டான். அப்பாவும் சிரித்துவிட்டு சரி மகனே நான்

அதனை உனக்கு வாங்கித்தருகிறேன் என்று சொன்னார். இப்போது அந்தக் காரைச் சுற்றியே அவனது மனம் ஓடிக்கொண்டிருந்தது. பல்கலைக்கழகத்தில் வகுப்புக்கள் நிறைவுற்றதும் தன் நண்பர்களை அழைத்துக் கொண்டு கார் விற்பனை செய்யும் அந்தக் கடைக்குச் சென்று காரைப் பார்ப்பான், அந்தக் காரை பரிசோதிக்கும் நோக்கில் ஓட்டிப்பார்ப்பான். இது அவனது வழமையான நடவடிக்கையாவிட்டது. அந்தக் காரை எப்படியாவது நான் வாங்கிவிடுவேன் என்று நண்பர்களுக்கு சொல்வான்.

அவன் தனது பட்டப்படிப்பை நிறைவு செய்யும் நிலையில் பரீட்சைக்கு தன்னை தயார்படுத்துவதைவிட அந்தக் காரை வாங்கிவிட வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தான். இப்போது அவனது இறுதிப்பரீட்சைகள் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. அந்தப் பரீட்சையிலும் இவன் சித்தி பெற்றான். அடுத்து அவனுக்கு பட்டமளிப்பு விழா. இவன் சந்தோஷத்தோடு வீட்டுக்கு ஓடிவந்தான். தகப்பனும் இவனைக் கட்டியணைத்து முத்தமிட்டு மகனே நீ நன்றாக உனது படிப்பை நிறைவு செய்து சிறப்பு சித்தி பெற்றிருக்கிறாய். உன்னை நினைத்தால் எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது என்று சொன்னார். அவனுக்கோ இதுவொன்றும் காதில் விழவில்லை. அவனுடைய எண்ணமெல்லாம் தன்னுடைய அப்பா தனக்கு அந்தக் காரை பரிசாக வாங்கிக் கொடுக்கப்போகிறார் என்பதிலேயே இருந்தது. இப்போது அப்பாவும் அழகானதொரு பரிசுப்பொதியை எடுத்து அவனுடைய கரத்தில் கொடுத்தார். அவனும் ஆர்வத்தோடு அந்தப் பரிசுப் பொதியை வாங்கி ஆவலுடன் பிரித்துப் பார்த்தான். அவனுக்கோ ஆச்சரியமும் அதிர்ச்சியும் காத்திருந்தது. அந்தப் பரிசுப்பொதிக்குள் காணப்பட்டது ஓர் அழகிய பரிசுத்த வேதாகமம். தகப்பன் சொன்னார்: உன்னுடைய வாழ்வில் மிக முக்கியமான நாள் இது. இந்த நாளில் உன் வாழ்வுக்கு என்னால் கொடுக்கக்கூடிய மிகவும் விலைமதிப்பற்ற பரிசு இது தான் என்றார். அதைப் பார்த்தவுடன் போலுக்கு மிகுந்த கோபமும் எரிச்சலும் வந்தது. எனக்கு காரை பரிசாக வாங்கிக் கொடுப்பீர்கள் என்று நான் நினைத்தேன், ஆனால் நீங்கள் எனக்கு இதனைக் கொடுத்துவிட்டீர்களே என்று கோபம் கொண்டான்.

தகப்பனைப்பார்த்து, அப்பா நான் உங்களை எவ்வளவு நம்பியிருந்தேன், நீங்களும் எனக்கு அந்தக் காரை வாங்கித்தருகிறேன் என்று தானே கூறினீர்கள். நானும் எவ்வளவு எதிர்பார்ப்போடு காத்திருந்தேன். ஆனால் இறுதியில் இப்படிச் செய்துவிட்டீர்களே? எனக்கு அம்மா இருந்திருந்தால் இப்படிச் செய்திருப்பார்களா என்று சத்தமாய் தகப்பனைப்பார்த்து கூச்சலிட்டவன் இனி உங்கள் முகத்திலேயே விழிக்கமாட்டேன் 'என்றுவிட்டு அந்த வீட்டினை விட்டு வெளியேறி தன் நண்பன் வீட்டில் குடியேறினான். அதன் பின் தன் நண்பன் வீட்டிலிருந்தே வேலை தேட ஆரம்பித்தான். அவ்வாறே அவன் ஒரு கம்பனியில் வேலைக்குச் சேர்ந்து அங்கே பெரியவனான். இதற்கிடையில் அவன் தகப்பன் அவனை சந்தித்து காரியங்களை கூறும்படி முயற்சி எடுத்தும் இவன் தகப்பனை சந்திப்பதற்கு இணங்கவில்லை. அவன் தன் வேலைகளோடேயே நாட்களை கழித்தான். தன் தகப்பன் எப்படி இருக்கிறார் என்று அறிய இவன் விரும்பவேயில்லை. இவ்வாறு காலங்கள் கழிந்தது. ஒரு நாள் திடீரென இவனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு. உன்னுடைய தகப்பன் மரித்துவிட்டார் என்று தெரிவித்தது. உடனே இவன் தகப்பனை தேடி வீட்டிற்குச்

சென்றான். அங்கே தகப்பனுடைய சடலைத்தைப்பார்த்தவுடன் இவனுக்குள் இருந்த வெறுப்பு நீங்கி அழுகை தான் வந்தது. தகப்பனுடைய உடலத்தைப் பார்த்து கதறி அழுதான். அப்போது அங்கே இருந்த இவனது உறவினன் ஒருவன், தம்பி உன்னுடைய அப்பா உனக்காக ஒரு பொதியை வைத்திருந்தார். அதனை அவர் தன்னுடைய அறையில் வைத்திருக்கிறார் அதை நீ பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னார். இவன் ஓடிச்சென்று அங்கே பார்த்த போது தகப்பன் அன்றைக்கு கொடுத்த அந்த பரிசுத்த வேதாகமம் இருந்தது. அந்த வேதாகமத்தை எடுத்து இவன் புரட்டிப்பார்த்த போது, அந்த வேதாகமத்திற்குள் அவர் அவனுக்குரிய சகல காரியங்களையும் எழுதி பத்திரமாக வைத்திருந்தார். அதில் எழுதியிருந்தது, இந்த உலகத்தில் உனக்குரிய மிகச்சிறந்த பரிசு இது தான். இது உனக்கு இருந்தால் எல்லாம் உன்னைத் தேடிவரும். இதைவிட இன்னொரு பரிசு இருக்கிறது, அது இதைவிட பெரியது அல்ல மாறாக நீ ஆசைப்பட்டமையால் உனக்காக அதையும் தருகிறேன் என்று எழுதியிருந்தது. இவன் மறுபக்கம் பார்த்த போது அங்கே இவன் விரும்பிய அந்த காரை வாங்கி அதற்குரிய பணம் இவன் பட்டம் பெற்ற அந்த நாள் செலுத்தப்பட்டமைக்குரிய பற்றுச்சீட்டு காணப்பட்டது. இவன் அந்த பற்றுச்சீட்டைக் காண்பித்து அந்த காரை வாங்கவேண்டியது தான் மீதமாயிருந்தது. ஆனால் இவன் அன்றைக்கு அவசரமாக நடந்து கொண்டமையால் அந்த காரை பெற்றுக் கொள்ளமுடியாமல் போய்விட்டது.

ஆம் நண்பர்களே இந்த நாட்களில் நாமும் சில காரியங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது அடைந்துவிட வேண்டும் என்று பல முயற்சிகளை பல வழிகளில் செய்கின்றோம். ஆனால் எவை எந்த நேரத்தில் எமக்கு கிடைக்க வேண்டும் என்று தேவன் அறிந்திருக்கிறார். அவர் ஏற்ற நேரத்தில் காரியங்களை வாய்க்கச் செய்வார். அவருக்காக காத்திருங்கள்.

**எரேமியா 29:11 நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும் படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.**

---

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

*"சிறைபிடிக்கப்பட்டவள் நான், ராஜா தயை பெற்றவளும் நான், என் ஜனம் மரண தண்டனையடைய காரணம் நான், மன்றாடி என் ஜனத்தை விடுவித்தவளும் நான்" நான் யார்?*

இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



அனல் 2017 பங்குனி - சித்திரை
மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**குதிரை**

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.




வாலிபர் வளாகம்



போதகர் வேதநாயகம் சுமணன்

# எரேமியாக்கள் எழும்பட்டும் தேசத்தில்

கடந்த வாலிபர் வளாகத்தினூடாக எரேமியா யார் என்றும், அவனது உருவாக்கமும் அழைப்பும், கூடவே பயப்படாமல் பணிசெய்ய உற்சாக மூட்டுதலையும் தியானித்தோம். தொடர்ந்து சில காரியங்களைப் பார்ப்போமா...

எரேமியா ஓர் உணர்ச்சிமிக்க வாலிபன்தான். ஆயினும் **அவனது முதுகெலும்பில் ஆவிக்குரிய இரும்பை தேவன் செலுத்தியதால்** அவனால் மிகச் சிறந்த, பலமுள்ள, தைரியமுள்ள தீர்க்கதரிசியாய் மாற முடிந்தது. நம்முடைய இயற்கையான குணங்களிற்கும், தகுதிகளிற்கும் அப்பாற்பட்ட வழிகளில் எடுத்துச் சென்று நம்மை தேவனால் உபயோகிக்க முடியும்.

**உன் வாழ்விலும் கூட ஆவிக்குரிய அர்த்தமுள்ள ஓர் பணிக்கு ஆண்டவர் உன்னை அழைக்கிறார்.**

## எரேமியாவின் குணலட்சணம்

அவனது வாழ்வில் விசேஷமாய் உண்மை, பரிதாபம், கபடின்மை, மனவுருக்கம், தேவபக்தி, சில சமயங்களில் ஒருவிதமான கோபம் இவையெல்லாம் அவனது வாழ்விலும் ஊழிய நடையிலும்

பார்க்கலாம். தேவ ஜனத்தின் பாவத்தைக் குறித்தும், அழிவைக் குறித்தும் தீர்க்கதரிசியானவன் அடைந்த ஆழமான ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றான். (என் இருதயம் பலட்சயமாயிருக்கிறது)

**தேவனிடத்தில் உண்மையும், மக்களிடத்தில் அன்பும் உடையவனாயிருந்து இரண்டிற்கும் நடுவே அவன் சிக்கித்தவித்தான். அவனுடைய வேதனையின் மிகுதியினால் மக்களைவிட்டு என்றென்றுமாய் நீங்கிவிட விரும்பினான். (எரேமியா 9:2)**

---

*அழுகையின்/புலம்பலின் தீர்க்கன் என்னும் பெயர் அவனுக்கு இருந்தாலும் சில சமயங்களில் ஆண்டவர் இனிமேல் கொண்டுவரப் போகிற நன்மைகளைப் பற்றி மிகவும் நேர்த்தியாக சிறப்பாக சொன்னான்.*

---

## எரேமியாவின் பணித்தளம்

இளவயதில் பக்தி அற்றுப்போய் தேவனை முற்றுமாய் மறந்த ஓர் கூட்ட ஜனத்தின் முன் நிற்கிறான் எரேமியா.

இஸ்ரவேல் சரித்திரத்தில் ஆரம்ப நாட்களில் தேவ ஜனம் ஆழமான பக்தியோடு தேவன் மேல் நம்பிக்கை வைத்து இருந்தார்கள். அவர்களது உறவு நெருக்கமாக இருந்ததினால் தேசம் தேவனது மணவாட்டியாக கருதப்பட்டது. **(தேவனே உன் நாயகர் ஏசாயா 54:5, எரேமியா 31:32)** இப்போது முழு இஸ்ரவேல் வீட்டாரும் தேவனைப் புறக்கணித்து வேறு தெய்வங்களை நாடிச் சென்றுவிட்டார்கள்.

---

*தேவன் இஸ்ரவேல் ஜனத்திற்கு உண்மையுள்ளவராய் இருந்தும் அவர்கள் அவருக்கு முதுகை காட்டினார்கள். விசுவாசப்பிள்ளைகள் (சபையின் மக்கள்) தங்களுடைய சொந்த இச்சைகளையும் உலகத்தின் பாவ சந்தோஷங்களையும் நாடும் போது தேவனுடைய நன்மைகளையும், மீட்பையும் மறந்து போகக்கூடிய அபாயத்திற்குள் உட்படுகின்றார்கள்.*

---

## தேவனைவிட்டு தூரப்பட்ட ஜனம் அவனது பணித்தளம்

கர்த்தர் எங்கே — தேவபிரசன்னம் வல்லமை ஆகியவற்றின் உணர்வு இல்லாத ஆசாரியர்கள் தேவன் தங்களைவிட்டு நீங்கிவிட்டார் என்று கவனியாதிருந்தார்கள். இஸ்ரவேலிலே தேவ பிரசன்னமும் ஆசீர்வாதமும் காணப்படாததின் காரணத்தைக் குறித்து சிந்தியாதிருந்தார்கள். இவர்கள் மத்தியில் தான் எரேமியா பணிக்கு அழைப்பு பெற்றிருந்தான். **எரேமியா 2:8 வேதத்தை போதிக்கிறவர்கள் என்னை அறியாமலிருந்து வீணானவைகளை பின்பற்றினார்கள்.**

எரேமியாவை இவ்விதமான ஓர் சூழலில் தான் தேவன் செயலாற்றும்படி அழைத்தார்.

- பக்தியில் பரிதாபம்
- தேவனைவிட்டு தூரப்பட்ட நிலை (முழுதேசமும்)
- கர்த்தர் எங்கே என்று கேட்கும் ஆசாரியர்கள், வேதத்தை போதிப்போர் அவரோடு உறவும் உண்மையும் அற்ற நிலை
- தீர்க்கதரிசிகள் பாகாலைக் கொண்டு தீர்க்கதரிசனம் (எப்போதும் செழிப்பு, செழிப்பு என்னும் உபதேசம்)

**உண்மையான தீர்க்கதரிசிகள் எப்போதும் தேவனுடைய வசனத்திற்கும் மனந்திரும்புதலுக்கும் நேராய் ஜனங்களைக் கொண்டு வரும்படியாக எதிர்பார்க்கப்பட்டார்கள்.**

அருமையான வாலிப தம்பி, தங்கையரே

**இக் காலத்து தேசத்தின் தேவை ஓர் எரேமியாவாக நீ எழும்பிவிட வேண்டும். உன் குண இலட்சணங்களை தேவன் அறிவார். நீ பணி செய்ய இருக்கும் பணித்தளத்தை தேவனே உனக்கு காட்டுவார். நீ மட்டும் ஒன்று செய். அவர் கரத்தில் உன்னைச் சம்பூரணமாய் ஒப்படைத்துவிடு.**

காலத்தின் தேவை அறிந்து

கர்த்தரின் அழைப்பை புரிந்து

கருத்துடன் செயலாற்ற கரத்தை கொடுப்பாயா தேவராஜ்யத்திற்காய்

தேவனை மறந்தும், தேவ வார்த்தையை அலட்சியம் செய்தும் வாழாதே ஆபத்து, உண்மையாய் தேவனை நேசி (தேவன் மேல் அன்புகூரு) அது உன்னை பணித்தளம் நோக்கி செல்ல பலப்படுத்தும் சந்தேகம் இல்லை.

**அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள் - லூக்கா 10:2**

## எரேமியாவின் அர்ப்பணம்

**நீ பெண்ணை விவாகம் பண்ணவேண்டாம் - எரேமியா 16:2**

வாலிப பிரயாத்தில் தன்னை ஆண்டவர் பணிக்கு அர்ப்பணித்து தீர்க்கனாவதற்கு ஒப்படைத்த எரேமியாவைப் பார்த்து ஆண்டவர்

கூறிய வார்த்தை தான்; விவாகம் பண்ணவேண்டாம். இதை கட்டளையாக சொல்கிறார். எவ்வளவு தியாகம் நிறைந்த ஓர் உன்னத சேவைக்காக முற்றுமான தேவனின் பிரிப்பு.

இதில்எனக்கும்உனக்கும்ஓர்பாடத்தை சொல்லதேவன்விரும்புகிறார்.

ஒவ்வொரு தனி மனிதனுக்குமான தேவனின் திட்டம், அழைப்பு, பணி, அர்ப்பணிப்பு வித்தியாசமானது.

ஏசாயா சொல்கிறார்: நானும் கர்த்தர் எனக்குத் தந்த பிள்ளைகளும் இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் இருக்கிறோம்.

ஏசாயா தீர்க்கனின் வாழ்வில் சொல்கிறார்: திருமணம் செய்து எனக்காக சாட்சியாக வாழுங்கள் என்பதாக.

எசேக்கியேலுக்கு சொல்கிறார்: உனக்கு விருப்பமானவளை (உன்னை சந்தோஷப்படுத்துகிற உன் மனைவியை) உன்னைவிட்டு ஒரே அடியினாலே எடுத்துக் கொள்ளப்போகிறேன். நீ அழமாலும் கண்ணீர் விடாமலும் இருப்பாயாக.

ஓசியா தீர்க்கனுக்கு சொல்கிறார்: நீ போய் ஒரு சோர ஸ்திரீயையும் சோரப்பிள்ளைகளையும் உன்னிடமாய் சேர்த்துக் கொள். தவறான வழியில் வாழ்வு நடத்துகிறவளை மனைவியாக்கும்படி தேவன் கூறுகிறார். தேவனை மறந்து விக்கிரக வழிபாட்டையும், அந்நிய ஜனங்களின் முறைமைகளையும் பின்பற்றி சோரம் போன ஜனத்தையும் தேவன் நேசிக்கிறார் என்பதற்கு அடையாளமாக தீர்க்கனை அடையாளப்படுத்துகிறார்.

---

சம்பூரணமான அர்ப்பணிப்பினால் தான் இந்த தேசத்தை தேவ வசனத்தாலும் தேவ கிரியையாலும் சந்திக்க முடியும். உன் இருயத்தின் ஆழத்திலே கேட்கும் தேவ சத்தத்திற்கு முற்றுமாய் அர்ப்பணி. தம்பி தங்கையரே அது எதுவானாலும் சீக்கிரமே தேவவசனம் கீழ்ப்படி. வித்தியாசம் வித்தியாசமான மனிதர்களுக்கு வித்தியாசமான குடும்ப வாழ்வின் முறைமைகளை தேவனே விதித்திருந்தாலும் நோக்கம் ஒன்றே ஒன்று. தேச மக்கள் தேவன் பக்கம் மனந்திரும்ப வேண்டும் என்பதே. தேவனின் நேசத்தை இவ் உலகிற்கு காண்பிக்க தேவன் வாலிபர்களை தேடுகிறார். விசேஷமாக எரேமியா போன்ற குணநலம், பணித்தள நிலை, அர்ப்பணம், யாரை அனுப்புவேன் யார் நமது காரியமாய் போவான்?

---

ஜெபிக்கலாமா?

அன்பின் ஆண்டவரே, உம் இருதய விருப்பம் என் இருதய விருப்பமாக மாற உதவி செய்யும். என் குணங்களை உம் ராஜ்யத்திற்காக பயன்படுத்தும். எனக்கு நீர் வைத்திருக்கும் பணித்தளத்திற்காய் உமக்கு நன்றி. நீர் சொல்வதற்கு முற்றிலுமாய் அர்ப்பணிக்க கிருபை தாரும்.

ஆமென்

முற்றும்.




கணவனும் இல்லை, வேறு பிள்ளைகளும் இல்லை. செல்லமாக வளர்த்த ஒரே மகன் அவனும் மரித்து போன நிலையில் இறுதியாக அடக்கம் செய்வதற்கு அவனை எடுத்து (தூக்கி) வரும் வழியில், **அழுகுரல் இயேசுவின் காதில் விழுகிறது.** திரளான ஜனங்கள் அவளுடனே கூட வந்தார்கள்.

**இயேசு மரித்தவனின் தாயை கண்ணோக்கிப் பார்த்து; அழாதே என்று சொல்லி மரித்தவனை உயிரோடு எழுப்பி தாயினிடத்தில் ஒப்படைத்தார்.**



இதை வாசிக்கும் நண்பர்களே, உங்கள் வாழ்விலும் நம்பிக்கை இழந்து போனவர்களாக, ஒரு வேளை கலக்கமுற்று இருக்கலாம். **அந்த வாலிபனை உயிரோடு எழுப்பிய அதே இயேசு இன்றும் உயிரோடு இருக்கிறார்** உங்களுக்காக. உன் நம்பிக்கையை இழந்து விடாதே. அவர் மீது விசுவாசம் கொள் உனக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் தர அவர் ஒருவரால் மட்டுமே முடியும்.

**வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத்தேயு 11:28**



# உன் சாயல் என்ன?

திருமதி. J.பிலிப்

ரெபேக்கா தான் ஒரு ஓவியராக வரவேண்டும் என்ற ஆசையுடன் அதிக நேரம் சித்திரங்கள் வரைவதில் ஈடுபடுவாள். ஒரு நாள் ஒரு அழகிய பெண் குழந்தையின் படத்தை பார்த்தாள். கள்ளம் கபடற்ற அழகிய முகத்தைப் பார்த்து அதை அழகாக வரைந்தாள். அப் படத்தை பார்த்த எல்லோரும் மிகவும் அழகிய பெண் குழந்தை படத்தில் இருக்கிறபடியே அழகாய் வரைந்திருக்கிறாய் என்று பாராட்டினர். பின் சில நாட்கள் கழித்து ரெபேக்கா இப்போது அழகிய கள்ளம் கபடற்ற குழந்தையின் படத்தை வரைந்துள்ளேன். ஏன் நான் இனி ஒரு விகாரமான தோற்றமுடைய ஒருவரின் படத்தை வரையக்கூடாது என்று யோசித்து, ஒரு சில நாட்கள் சிலரை சந்தித்து பார்த்தாள். அவள் எதிர்பார்த்த விகாரமான தோற்றமுடைய பெண்களை சந்திக்க முடியவில்லை. ஆகவே ஒரு நாள் யோசித்தாள்: சிறைச்சாலைக்கு சென்றால் அங்கு பல குற்றச் செயல்களுடன் பிடிபட்டவர்கள் இருப்பார்கள் அவர்களுடைய முகங்கள் விகாரமாய் இருக்கும் என்ற எண்ணத்துடன் சிறைச்சாலை அதிகாரிகளுடைய




அனுமதியுடன் பெண்கள் இருக்கும் இடத்திற்கு சென்று அங்கே இருந்தவர்களை பார்வையிட்டாள்.

அங்கே ரெபேக்காவின் சிந்தனையில் இருந்த தோற்றமுடைய ஒரு பெண்ணைக் கண்டு அவளைப் பார்த்து அவளுடைய சாயலை வரைவதற்கு அவளிடம் அனுமதி கேட்டாள். அப்போது அப் பெண், ஏன்? என்னையா? பார்த்து வரைய ஆசைப்படுகிறாய்

என்று ஆச்சரியமாய் கேட்டாள். அப்போது ரெபேக்கா தான் வரைந்த அழகிய கள்ளம் கபடற்ற பெண் குழந்தையின் படத்தை காண்பித்து இதற்கு எதிர் மறையாக ஒன்றை வரைய ஆசைப் படுகிறேன் என்றாள். படத்தைப் பார்த்தவுடன் அப் பெண் விம்மி, விம்மி அழ ஆரம்பித்தாள். ஒன்றுமே புரியாத ரெபேக்கா ஏன் அழுகிறாய் என்று அந்த பெண்ணிடம் கேட்ட போது அப் படத்தில் இருக்கும் சிறு குழந்தை தான் எனவும், தனக்கு இருந்த கோபம், எரிச்சல், சண்டைக்குணம், பெருமை போன்ற பல தீய குணங்களால் பல குற்றச் செயல்களை செய்து இன்று சிறையில் இருப்பதாகவும், இதின் நிமித்தம் தன்னுடைய சாயல் இப்போ மாறிவிட்டது என்று தன்னுடைய துக்கமான நிலையை ரெபேக்காவிடம் கூறினாள்.

இக் கதையை வாசிக்கும் சகோதரியே, இன்று உன் சாயல் எவ்வாறு இருக்கிறது என யோசிக்கிறாயா? நான் எந்த குற்றச் செயலும் செய்யவில்லை, நான் சிறையிலும் இல்லை என்று கூட நீ சிந்திக்கலாம். ஆனாலும் **உன் சாயல் இன்று என்ன?** உன்னை உருவாக்கிய உன் தேவனிடத்தில் நீ விசாரிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

**ஆதியாகமம் 1:27a தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்,** அவனைத் தேவ சாயலாகவே தேவன் சிருஷ்டித்தார் என வேதம் கூறுகிறது. ஆனால் **ஆதியாகமம் 3:24a அவர் மனுஷனைத் துரத்திவிட்டு,** தம்முடைய சாயலாக உருவாக்கிய மனுஷனை தேவன் துரத்திவிட்டதின் காரணம் அவனது கீழ்ப் படியாமை.

தேவ சாயலாக உருவாக்கப்பட்ட மனிதர்களுக்குள் கீழ்ப்படியாமை வரக்காரணம் என்ன? ஸ்திரீயானவள் தந்திரமுள்ள சர்ப்பத்துடன் சம்பாஷித்து, சர்ப்பத்தின் பேச்சை, "தேவர்களைப்போல் இருப்பீர்கள்" என்றதை நம்பி விட்டாள். தேவன் தம்முடைய சாயலாக இவர்களை உருவாக்கிய பின் தேவர்களைப் போல என்ற சாயலை இவள் விரும்பி சர்ப்பத்திற்கு அடி பணிந்துவிட்டாள். **ஆதியாகமம் 3:6 ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு (மாம்சத்தின் இச்சை) நல்லது, பார்வைக்கு (கண்ணின் இச்சை) இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு (ஜீவனத்தின் பெருமை) இச்சிக்கப்படத்தக்க விருட்சமாய் இருக்கிறது என்று கண்டு அதின் கனியைப் பறித்து புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்.** கீழ்ப்படியாமையின் நிமித்தம் தேவன் இட்ட கட்டளையைமீறியதினால்தேவனைச் சந்திக்க முடியாமல், தங்களுடைய சாயலை இழந்ததின் நிமித்தம் கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டதின் விருட்சங்களுக்குள் ஒளிந்து கொண்டார்கள்.

இவ் வருடத்தின் நடுப் பகுதியை அண்மித்துக்கொண்டிருக்கிறோம். இவ் வேளை

சகோதரியே, உன் வாழ்க்கையைக் குறித்து நீ ஆராய்ந்து பார்ப்பது நல்லது. தேவ சாயலை உன் தேவன் உன்னில் காண முடிகிறதா? அல்லது உலக பெண்களின் சாயல் உன்னில் காணப்படுகிறதா? **இன்று உன் சாயலை அழகு படுத்துவதற்கு அனேக அழகு நிலையங்கள் உண்டு. அவற்றில் உன் நேரத்தை வீணடிக் காதே. அழகு நிலையங்கள் உன்னை உருவாக்கிய உன் தேவன் விரும்பும் சாயலாக உன்னை ஒரு போதும் மாற்றமுடியாது என்பதை மறந்து போகாதே, ஏமாந்து போகாதே. தேவனுடைய வார்த்தை மட்டுமே உன் சாயலை மாற்றமுடியும்.** ஏவாளின் கீழ்ப் படியாமையின் நிமித்தம் தன்னுடைய சாயலை இழந்து தோட்டத்தைவிட்டு, தேவ சமூகத்தை விட்டு துரத்தப்பட்டாள். அப்படிப்பட்ட நிலை நமக்கு ஏற்படக்கூடாது என்பதற்காய் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை இப் பூமிக்கு அனுப்பினார். ஏன் மீண்டும் நாம் தம்முடைய சாயலைப் பெற்று நித்திய ஜீவனை அடையும் படியாகவே.

சிறைச்சாலையில் இருந்த பெண்ணின் விகார தோற்றத்திற்கு காரணம் மாம் சத்தின் கிரியைகள். **ஆனால் ஆவியின் கனியோ; அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சை யடக்கம்.** உன் வாழ்வில் இவ் ஆவியின் கனி காணப்படு கிறதா? வார்த்தையின் வெளிச் சத்தில் உன்னை ஆராய்ந்து பார். அல்லது இன்றே தேவனி டம் கேள். தேவன் உன்னை ஆவியின் கனியால் அலங் கரித்து தேவ சாயல் உன்னில் காணப்பட செய்வார்.

---


## சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:

### வினாவிடை - 80

அ.சலிஸ்ரா - பள்ளிக்குடா

### குறுக்கெழுத்துப் போட்டி - 78

குகன் குடும்பம் - கனடா









அன்பான தேவனுடைய பிள்ளைகள் அனைவருக்கும் தேவனுடைய பெரிதான இரக்கங்களும், சமாதானமும், மகிழ்ச்சியும் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் நிறைக்க வேண்டும் என வேண்டுதல் செய்கிறோம்.

இவ் வருடம் ஆரம்பித்து நான்கு மாதங்கள் ஆச்சரியமாக கடந்துவிட்டது. இத்தனை நாட்களும் தேவன் தம்முடைய காக்கும் கரம் கொண்டு பாதுகாத்துள்ளார் தேவனுக்கு நன்றி.

தொடர்ந்தும் எம்முடைய கிறிஸ்தவ வாழ்வின் நிலையை நாம் புரிந்து வாழ வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார்.

**கலாத்தியர் 2:20a கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்.** சிலுவை என்றாலே சாவு தான். அந் நாட்களில் ஒருவருக்கு சிலுவை தீர்ப்பாகி அவனது தோளில் சிலுவை வைக்கப்பட்டால் அதன் முடிவு மரணம் தான். அதைவிட வேறு எந்த மாற்று வழியும் இல்லை. தான் சாகப்போகும் சிலுவையை தானே தூக்கிய ஒருவன் தப்பிப் போனதாக சரித்திரமே இல்லை. **இன்றைக்கு இந்த சிலுவை கிறிஸ்தவர்களின் சின்னமாகிவிட்டது. ஆனால் இந்த சிலுவையின் தியாகம் எம் வாழ்வில் வகிக்கும் பங்கு என்ன?**

எனதருமை கிறிஸ்தவ மகனே, மகளே நீ சிலுவையை சுமக்கின்றவனாக, சுமக்கின்றவளாக இருந்தால் மாத்திரம் தான் நீ கிறிஸ்தவன் என்று சொல்வதற்கு தகுதி பெற்று இருக்கிறாய். இன்றைய நிலையை நாம் அவதானிக்கும் போது இதமானதும், சுகமானதும், தேவையானதும் என்று நினைக்கக் கூடிய ஏராளமான காரியங்கள் நமது

மனதை, சிந்தையை, சரீரத்தை கெடுத்துப் போடக்கூடியதாக நம்மை சுற்றிலும் பெருகி இருக்கின்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை, எம்முடைய விசுவாச வாழ்வை கெடுக்கும்படி பிசாசு நாகரீகம் என்ற போர்வையில் பல காரியங்களை செயற்படுத்திக் கொண்டிருக்கின்றான். இதற்குள் அனேகர் சிக்கிக் கொண்டதால் அவர்களது ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்டு பரிதாப நிலைக் குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஆனால் நாமோ அனுதினமும் சிலுவையை சுமக்க வேண்டியவர்கள். இந்த உலகத்திற்காக சிலுவையில் அறையப்பட வேண்டியவர்கள். மட்டுமல்ல எம்மை அழித்துப் போட வல்லமையுள்ள காரியங்களில் இருந்து தப்பிக் கொள்ள ஒரு வழி தான், "கர்த்தாவே நித்தமும் என்னை சிலுவையில் அறையும்" என ஜெபிப்பது தான். ஏனெனில், தேவன் மனிதன் மேல் கொண்ட அன்பின் உச்ச நிலையின் வெளிப்பாடே சிலுவையாகும். சிலுவை சுமக்க சம்மதம் இல்லாமல் பரலோகம் போவதை சிந்திக்க முடியாது. எனவே எனக்காய் சிலுவை சுமந்தவரே என் சிலுவையை சுமந்து உம்மை பின்பற்ற இந்த உலகத்திற்கு நான் சிலுவையில் அறையப்பட உதவி செய்யும் என கேளுங்கள். தேவன் உதவி செய்வார்.

# வினாவிடை - 80

01. சவுல் - 1சாமுவேல் 28:15
02. ஆதியாகமம் 23:6
03. பவுல் - 11தீமோத்தேயு 4:16
04. எரேமியா 15:9
05. தாவீது - சங்கீதம் 37:25
06. ஏசாயா 5:27
07. எரேமியா - புலம்பலர் 3:31
08. எட்டு - ஆதியாகமம் 25:1-2, 1நாளா 1:27-32
09. மீகா 7:8
10. நான்கு - யாத்திராகமம் 6:23






# தீமோத்தேயுவின் நல் ஊழியத்தின் சாட்சி

*புதிய ஏற்பாட்டில் தேவனுடைய ஊழியம் என்று பார்க்கிற போது 2000 வருடங்களுக்கு முன்பதாக இயேசு கிறிஸ்துவின் வருகை, அவருடைய ஊழியத்தின் தன்மை, முறைமைகள் அதைத் தொடர்ந்து அப்போஸ்தலர்களுடைய அழைப்பு என்று தொடர்ந்து பார்க்கிற போது இத்தனை வருடங்களும் தேவனுடைய ஊழியம் வளர்ந்து கொண்டே யிருக்கிறது. இந்த ஊழியத்தை, தேவனுடைய ராச்சியத்தின் வேலை களைத் தடுப்பதற்கு உலகத்தில் எத்தனையோ பெரிய மனிதர்க ளெல்லாம் எழுந்தார்கள். கிறிஸ்தவத்தை அழிக்கும்படியான காரியங்கள் நடைபெற்றது. ஆனால் எந்த எதிர்ப்பாலும் கிறிஸ்தவத்தையும், கிறிஸ்துவுக்காக செய்கிற ஊழியத்தையும் தடுத்து நிறுத்தமுடியவில்லை.*

ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்ந்த ஊழியர்கள், கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்தவர்கள், அழைக்கப்பட்டவர்கள் என்ன செய்தார்கள் என்றால்; அடுத்த சந்ததி கர்த்தருடைய ஊழியத்தை செய்ய வேண்டும் என்று சொல்லி கர்த்தருக்காய் வேலை செய்கிறவர்களை உருவாக்கினார்கள். உண்மையில் இயேசு சீக்கிரமாக வருகிறார். உதாரணமாக; ஒருவேளை எங்களுடைய் காலத்தில் கர்த்தருடைய வருகை இல்லாத பட்சத்தில் அல்லது தாமதமானால் எங்களுடைய அடுத்த சந்ததி கர்த்தருடைய ஊழியத்தை செய்ய வேண்டும்.

பவுலின் முன்மாதிரியான அழைப்பை பார்க்கிற போது, அவர் எத்தனையோ பேரை ஊழியர்களாக உருவாக்கினார். அதில் ஒருவர் தான் இந்த தீமோத்தேயு.

எப்படி அணுகி, அவனை தேவனுக்குள் கொண்டு வருகிறார் என்று பார்க்கிற போது அதை அப்போஸ்தலர் 16ஆம் அதிகாரத்தில் பார்க்கலாம்.

**அப்போஸ்தலர் 16:1-2 (1.) அதன்பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன். 2. அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான்.** தீமோத்தேயுவை பார்க்கிற போது அவனைக் குறித்த விளங்கத்தக்கதாக, தெரியத் தக்கதாக எழுதப்பட்ட காரியம் என்னவென்றால், அவன் தாய் யூத ஸ்திரீ, தகப்பன் கிரேக்கன். அவன் நற்சாட்சி பெற்றவன். ஆகவே இப்படிப்பட்ட மனிதனை பவுல் அழைத்துச் சென்று தேவனுடைய ஊழியத்தை செய்யும் விதங்களையும், முறைகளையும், அவன் வாழவேண்டிய வாழ்க்கை முறைகளையும் கற்பித்தார். பிற்பாடு இந்த நிருபத்தை எழுதுகிற காலகட்டத்தில் பவுல் சிறையிலே இருந்தார். அந்த நாட்களிலே பவுல் இருந்த சிறை மிகுந்த வேதனை நிறைந்த, இருளான, தொடர்பற்ற இடமாக இருந்தது. அவ்வாறான மிகவும் துன்பமான இடத்தில் இருந்து கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று, **தான் தெரிந்து கொண்டவனை அனுகுகிற போது "தன்னுடைய குமாரன்" என்று அனுகுகிறார்.**

## 01. சிறப்பான ஊழியத்திற்கு குமாரத்துவம் உடையவர்களாக இருக்க வேண்டும்

**1தீமோத்தேயு 1:2 பிரியமுள்ள குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது: 1தீமோத்தேயு 1:2 விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத் தேயுவுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.** இவ் வசனங்களில் தீமோத்தேயுவை குமாரன் என்று கூறுவதைப் பார்க்கலாம். இங்கே தீமோத்தேயு வினுடைய வாழ்க்கை முறையையும் பார்க்கிற போது தகப்பன் - மகன் உறவு காணப்படுகிறது. இந்த உறவு மாம்ச ரீதியாக வந்த உறவல்ல, இது ஆவிக்குரிய உறவினால் ஏற்பட்ட உன்னதநிலை. இந்த நிருபத்தில் இருந்து பரிசுத்த ஆவியானவர் எதனைக் காண்பிக்கிறார் என்றால், தீமோத்தேயுவின் ஊழியத்தை பார்த்தால், அவனுடைய குமாரத்துவத்திற்குள்; **கீழ்ப்படிவு, தாழ்மை, செவி சாய்த்தல், விட்டுக்கொடுத்தல், பணிவு** போன்ற பல காரியங்கள் அடங்குகிறது.

**தீமோத்தேயுவிற்குள் குமாரனுக்கேற்ற சாயல் காணப்பட்டது. இங்கே எதனைக் காண்பிக்க விரும்புகின்றேன் என்றால், எமக்கும் சபைக்**

**கும் வருகிற ஒவ்வொருவரோடும் உண்மையான உறவு இருக்க வேண்டும்.** எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய பிள்ளை, குமாரன் என்ற உறவோடு அவருக்காக ஊழியத்தை நாம் செய்ய வேண்டும். இயேசுவைப் பிதாவானவர்; **"இவர் என்னுடைய நேசகுமாரன்"** என்று சொன்னார். எனவே அதைப் புரிந்து குமாரன், தகப்பன் என்கிற உறவிலே எங்களுடைய ஊழியத்தைச் செய்வோமென்றால் உண்மையில் அந்த ஊழியத்தில் பெறுமதி இருக்கிறது. அந்த ஊழியம் தான் இந்த தேசத்தை அசைக்கிற ஊழியமாக இருக்கும். அந்த ஊழியம் தான் ஆத்துமாக்களை தேவன் பக்கம் கொண்டுவருகிற ஊழியமாக இருக்கும். மோசேயின் தாய் மோசேக்கு ஊழியம் செய்தாள் - இது உறவின் அடிப்படையிலான ஊழியம். இவ் உறவின் அடிப்படையிலான ஊழியத்தில் ஒருவிதமான உறுதி காணப்படும். **தகப்பன் - மகன் என்கிற நிலையில் நாம் ஊழியம் செய்தால் அது எம்மை அசையபண்ணாது. அதை நாம் இலகுவில் அற்பமாக எண்ணமாட்டோம்.** ஏனென்றால் தீமோத்தேயு அதைத்தான் செய்தான். பிறப்பின்படியான உறவையல்ல ஆவியின்படியான உறவை பார்க்கிறோம்.

தகப்பன் - மகன் என்கிற போது ஐக்கியம், சிநேகம், உறவு காணப்படும். தாவீதும் யோனத்தானும் உயிரைப் போன்று சிநேகித்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் இரண்டு பேரின் அர்ப்பணிப்பும் ஊழியத்தையும் பார்த்தால் அது எப்போதும் உதாரணப்படுத்தக்கூடிய ஊழியம். எப்போதும் புகழ்ந்து சொல்லத்தக்க உறவுமுறை. தயவு செய்து தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன், எம்முடைய ஊழியத்திலும் இவ்வாறான உறவு முறை காணப்பட வேண்டும். **ஒருவேளை மாம்சத்தின்படி ஒன்றானவர்களாக இல்லாவிட்டாலும் ஆவியின்படி நாம் ஒன்றானவர்கள் இதை எப்போதும் நினைத்தால் ஆண்டவருடைய ஊழியத்தை உற்சாகமாய் செய்ய முடியும்.** எங்களுக்கு வரும் எந்தவிதமான வேதனைகளும், மனக்கசப்புக்களும், துன்பங்களும் ஒரு போதும் எங்களை அழைத்தவரின் உன்னதமான ஸ்தானத்தை மறைப்பதற்கு வழிவகுக்கக்கூடாது.

தீமோத்தேயு பவுலினால் நம்பத்தக்க ஒருவனாய் இருந்தான். ஏனென்றால் பவுல் சொல்கிறார்; அவன் போல உண்மையுள்ளவன் இல்லை என்று. அவன் உண்மையுள்ளவன், அவனிடம் எந்தக் காரியத்தையும் நம்பிக் கொடுக்க முடியும். இந் நாட்களில் இப்படிப்பட்ட ஒரு ஊழியத்திற்காக தேவன் எங்களை அழைக்கிறார். சிலவேளை இதுவரைக்கும் நாம் தடுமாறியிருக்கலாம் அல்லது எமது உறுதி தன்மையில் தளம்பல் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இனி நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். ஏனென்றால் எம் தேவன் ஒரு போதும் எம்மை கைவிடமாட்டார்.

## 02. உடைந்த இருதயம் உடையவர்களாய் இருக்க வேண்டும்

**11தீமோத்தேயு 1:3 நான் இரவும் பகலும் இடைவிடாமல் என் ஜெபங்களில் உன்னை நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும் படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருந்து.** தீமோத்தேயுவின் கண்ணீர் பவுலுக்குத் தெரிகிறது. **அவன் அழுது அழுது ஆத்துமாக்களுக்காய் ஜெபிக்கிற ஒருவனாய் இருந்திருப்பான் என்று நினைக்கிறேன். அழுது அழுது தேவன் தந்த ஊழியத்தை நிறைவேற்றிய ஒருவன். உடைந்த இருதயத்தோடு தேவனுக்காக ஊழியம் செய்த ஒருவன்.** உள்ளம் உடைந்தால், நொறுங் குண்டால் தான் கண்ணீர் வரும் எந்த கடினமான இருதயமாக இருந்தாலும் இருதயம் உடைந்தால் கண்ணீர் வரும். தீமோத்தேயுவிற்கு கண்ணீர் வந்தது என்று சொல்லப்படுகிற போது நான் நினைக்கிறேன் அவன் அழிந்து போகிற ஆத்துமாக்களைக் குறித்து அனுதினமும் அழுகிறவனாய் இருந்திருப்பான். தன்னை ஊழியத்திற்காக உருவாக்கிய பவுல் சிறையிலே இருக்கிறார் என்று அழுதிருப்பான் அல்லது மக்களுடைய வேதனையைப் பார்த்து அழுதிருப்பான்.

**நாம் ஊழியராய் விடுகிற கண்ணீரை யாரும் பார்க்கவில்லை என்று நீங்கள் ஒரு போதும் நினைக்கக்கூடாது. உங்கள் கண்ணீரெல்லாம் துருத்தியில் சேர்த்து வைக்கப்படுகிறது என்று இயேசு சொன்னார்.** நீங்கள் தேவனுக்காக உடைந்த உள்ளத்தோடு உண்மையாக கண்ணீரோடு ஜெபிக்கிறீர்களா? நீங்கள் மறைவில் விடுகிற கண்ணீரும் கணக்கிலே வைக்கப்படும். சாதரணமாக பவுலே தன்னுடைய உடன் ஊழியனாகிய தீமோத்தேயுவின் கண்ணீரை காண்கிறான் என்றால் எங்களுடைய பரம தகப்பன் எங்களை அழைத்தவர் எம் ஒவ்வொரு வருடைய கண்ணீரையும் காண்கிறார். நீங்கள் செய்கிற ஊழியத்தின் தாற்பரியத்தை மற்றவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்க முடியும். எனவே நீங்கள் அழுவது யாருக்கும் தெரியாமல் இருக்கலாம், உங்களை மற்றவர்கள் தூசிப்பது உங்கள் காதுகளில் விழுகிறது ஆகவே அதனை நினைத்து நீங்கள் தனிமையில் அழுகிறீர்கள். நீங்கள் ஆத்தும பாரத்தோடு அழுகிறீர்கள். எங்கள் கண்ணீரை யார் காணப்போகிறார்கள் என்று ஒரு போதும் நினைக்கக்கூடாது. **ஏனென்றால் தீமோத்தேயுவின் கண்ணீரை பவுலே காண்கிறார் என்றால் அதைவிட கர்த்தர் எம்மை முதலாவது காண்கிறார்.**

தீமோத்தேயு கண்ணீர்விட்டு அழுது ஊழியம் செய்கிற ஒரு மனிதன். **இனி நாம் உள்ளம் உடைகிற ஒரு ஊழியத்தை செய்ய வேண்டும். உண்மையாக ஊழியம் செய்ய வேண்டும் இது தான் பவுல் - தீமோத்தேயுவில் காணப்**

**பட்டது. இப்படியான ஊழியத்திற்கு கர்த்தர் எம்மையும் அழைக்கிறார்.** நாங்கள் கண்ணீர்விட்டு ஊழியம் செய்ய வேண்டும். இயேசுவும் கண்ணீர்விட்டு ஊழியம் செய்தார். பவுல் கண்ணீர் விட்டு ஊழியம் செய்தார். ஆதி திருச்சபையிலே துன்பத்தின் மத்தியில் ஊழியம் செய்தார்கள். உங்களுக்கு கண்ணீர் வரத்தக்கவிதத்தில் உங்கள் ஊழியத்தின் முறைகள் இருக்கலாம். உங்களுடைய குடும்ப சூழ்நிலைகள் கூட கஷ்டங்களாய், பாரங்களாய் இருக்கலாம். அதன் மத்தியிலும் நீங்கள் அழைத்த அழைப்பை உறுதியாய் பற்றிக் கொள்ள வேண்டும். ஆண்டவருக்காக முன் வைத்த காலை பின்வைக்காதபடி காத்துக் கொள்ள வேண்டும்.

## 03. பின்பற்றுகிற இருதயம் உடையவர்களாய் இருக்க வேண்டும்

**11தீமோத்தேயு 1:4 உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூரு கிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்.** சிறையிலிருக்கிற பவுல் தீமோத்தேயு வுடைய விசுவாசத்தை நினைக்கிறார். **11தீமோத்தேயு 1:5 அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கி றேன்.** இங்கு தீமோத்தேயுவின் அம்மாவையும் அம்மம்மாவையும் குறித்து சொல்லியிருக்கிறார். ஏன் தகப்பனைக் குறித்து சொல்லவில்லையென்றால் தகப்பன் கிரேக்கனாய் இருந்து யூத ஸ்திரீயை திருமணம் செய்திருக்கிறான். இங்கு யூத தாய் பற்றிய விளக்கத்தை வைக்கிறார். **இவனிடம் மாயமற்ற சிறப்பான விசுவாசம் இருந்தது. இவன் குமாரத்துவ பண்புடையவன், உடைந்த இருதயம் உடையவன், பின்பற்றும் இருதயம் உடையவன்.**

**அம்மம்மாவின் நற்குணம், தாயினுடைய நற்சுபாவம் எல்லாவற்றையும் பார்த்து அதைப் போன்று தன்னை தீமோத்தேயு உருவாக்கியிருந்தான். நாம் நல்ல ஊழியர்கள் என்றால் எங்களுக்குள்ளும் பின்பற்றும் இருதயம் இருக்க வேண்டும்.** நல்ல செயல்கள் செய்கிறவர்களின் நல்ல காரியங்களை பின்பற்ற வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக தேவனை பின்பற்றுகிற இருதயம் இருக்க வேண்டும்.

*தொடரும்*







ஜசிந்தா அக்கா

இயேசப்பாவிற்கு விருப்பமான சின்னத் தம்பி, தங்கையரே உங்கள் எதிராளி யார் என்று யோசிக்கிறீர்களா? உங்களுக்குப் பக்கத்திலிருக்கும் யாரும் அல்ல. அவன் தான் பிசாசு. இவன் உங்களுக்கு மட்டுமா எதிராளி? இல்லை, இல்லை. இயேசு சுவாமிக்கும் அவன் எதிராளி. இயேசு அப்பாவிற்கு எது எல்லாம் விருப்பம் இல்லாத காரியங்களோ அதையெல்லாம் செய்வான். உங்களுக்கு வியாதியைப் போட்டு வேதனைப்பட வைப்பான். பிழையான வேலைகளைச் செய்ய வைத்து கவலையோடு இருக்க வைப்பான். படிக்க முடியாத தன்மையைப் போட்டு படிக்கவிடாமல் தடுப்பான். அப்படியிருந்தால் நீங்கள் பரீட்சையில் சித்தியடையமாட்டீர்கள் அல்லவா? இயேசுவிடம் ஜெபிக்காமலும், வேதம் வாசிக்காமலும் இருக்கும்படி செய்வான். வேத வசனப்படி நடக்காமல் கெட்ட கெட்ட பிள்ளைகளாக நடக்க வைப்பான். கெட்ட பிள்ளைகளை மற்றவர்கள் வெறுப்பார்கள். பிசாசு எப்பொழுதும் கேடானவற்றையே உங்களுக்குச் செய்வான். அவன் உங்கள் எதிராளி அல்லவா?

ஒரு நாள் கடுமையான பசியோடு இருந்த ஒரு சிறு பையன் ஏதாவது சாப்பிடக்கிடைக்குமா என்று கவலையோடு வீதியிலே நடந்து சென்று கொண்டிருந்தான். அப்பொழுது மிகவும் சிறியதொரு கொட்டில் போன்ற ஒரு கடையைக் கண்டான். அக் கடைக்குப் பின்னால் ஒருவர் வடைகளைச் சுட்டுக் கொண்டிருப்பதை அவதானித்தான். சிறுவன் கைகளைப் பின்னால் கட்டியவண்ணம் மெல்ல மெல்ல அடிமேல் அடி வைத்து வடையண்டை வந்து

நின்றான். யார் தம்பி நீ? உனக்கு என்ன வேண்டும்? என்று வடை சுடுபவர் கேட்டார். சிறுவன் பதிலளிக்கவில்லை. அமைதியாக நின்றான். ஆனால் எதிராளி சும்மா இருப்பானா? அவனும் சிறுவனோடு பேசத் தொடங்கினான். "மெதுவாக வடையை எடுத்துக் கொண்டு ஓடு" சிறுவனும் தருணம் பார்த்து வடையை எடுத்துக் கொண்டு ஓடும் போது எட்டிப்பிடித்தான் சிறுவனை வடைக்காரன்.

சிறுவன் மிகவும் அழுதான். வடைக்காரன் மிகுந்த கோபத்துடன் சிறுவனின் வடை எடுத்த கரத்தை கொதி எண்ணை இருந்த தாச்சிக்குள்ளாகப் பிடித்து அந்தக் கையிலே கொதி எண்ணை இரண்டு மூன்று தடவைகள் அள்ளி ஊற்றினான். சிறுவன் துடியாய் துடித்து கதறி அழுதான். அழுது கொண்டே சென்றான். செல்லும் போது எவ்வளவு வறுமை இருந்தாலும் நான் இனி களவு எடுக்கமாட்டேன் என்ற தீர்மானத்தோடு கடந்து சென்றான்.


சின்னத்தம்பி தங்கையரே, உங்கள் எதிராளியைப் புரிந்து கொண்டீர்களா? அவன் உங்களைத் தூண்டிவிட்டு நீங்கள் கஷ்டப்படுவதைப் பார்த்து சந்தோஷப்படுபவன். ஆகவே தான் **"தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்: பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" என்று வேதாகமத்திலே யாக்கோபு 4:7ல்** எழுதப்பட்டிருக்கிறது.

**ஆகவே உங்கள் சின்ன இருதயத்தில் வரும் கெட்ட நினைவுகளை செய்யாதிருங்கள். அப்பொழுது பிசாசு உங்களைவிட்டு ஓடிப்போவான். நீங்களும் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பீர்கள். உங்களுக்கு ஜெயம்! பிசாசுக்குத் தோல்வி!**

**களவு செய்யாதிருப்பாயாக – யாத்திராகமம் 20:15**





## கிறிஸ்டியன் பிரடரிக் ஸ்வார்ட்ஸ் 1726 - 1798

### இயேசுவைக் காட்டுங்கள்...

திருநெல்வேலி திருமண்டிலம், கிறிஸ்தவ ஆலயங்களே இல்லாத காலம். இருள் நிறைந்த காலம் என்று கூட கூறலாம். ஏனெனில் சுவிசேஷம் அங்கு அறிவிக்கப்படாதிருந்தது.

விடிவெள்ளி நட்சத்திரமாய் 1771ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு வந்தார் கிறிஸ்டியன் பிரடரிக் சுவார்ட்ஸ். சிறுவயதிலேயே தாயாரை இழந்திருந்தாலும் தந்தையின் வளர்ப்பு அவரை மிஷனெரியாக்கியது.

ஊழியப்பணியோடு சமுதாயப்பணியையும் செய்தார். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதையே பாக்கியமாகக் கருதி ஏழைகளின் வாழ்வை உயிரடையச் செய்தார்.

கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும், ஹைதர் அலிக்கும் மைசூரில் சண்டை நடந்து கொண்டிருக்கும் போது அநேக மக்கள் தங்கள் உயிரை இழந்தார்கள். அதிக சேதங்கள் ஏற்பட்டது. ஹைதர் அலியுடன் வீணாகப் போரிட்டு தங்களை இழந்து போக விரும்பாத கிழக்கிந்திய கம்பெனியார் ஹைதர் அலியிடம் உடன்படிக்கை செய்யச் சென்றார்கள். அப்போது ஹைதர் அலி சுவார்ட்ஸ் ஐயர் அவர்களை சுட்டிக்காட்டி, அந்த கிறிஸ்தவரை கூப்பிடுங்கள். அவர் யாரையும் ஏமாற்றமாட்டார், அவர் சொன்னால் போதும் என்றார்.

சுவார்ட்ஸ் ஐயர் தஞ்சாவூர் அரசவையில் முதல் அமைச்சராகவும், மன்னரின் தலைமை குருவாகவும் செயற்பட்டார். தஞ்சை மன்னன் சரபோஜியை உருவாக்கியவரும் இவரே. தஞ்சாவூரில் பஞ்சம் தலைவிரித்தாடிய போது, உணவுப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் உண்மைப் பொறுப்பைப் பெற்று, எல்லா சமயத்தினருக்கும் சேவைகள் செய்தார்.

"திருநெல்வேலியின் தந்தை" என்றழைக்கப்படும் சுவார்ட்ஸ் ஐயர் தான் முதல் திருச்சபையை அங்கு பிரதிஷ்டை செய்து, முதல் ஞானஸ்நான ஆராதனையையும் நடத்தினார். குளோரிந்தாள், சத்தியநாதன், தாவீது சுந்தரானந்தம், வேதநாயகம் சாஸ்திரியார் ஆகியோரை கிறிஸ்துவுக்காக மாபெரும் பணி செய்யத் தூண்டுகோலானார்.

48 ஆண்டுகள் இந்தியாவிலேயே அரும்பணிகள் செய்த இவர், ஒரு முறை கூடத் தம் தாயகம் திரும்பவில்லை.

**அன்பரே! ஆண்டவரின் அழைப்பில் நிலைத்து நிற்கிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: விருப்பம் இல்லாத காரியம் எதிர்ப்படும்போது ஒருமணிநேரம் வேதத்துடன் ஒட்டிக்கொள் — சுவார்ட்ஸ்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜீன் 23**

## வில்லியம் பூத்
## 1829 - 1912



### மாபெரும் சாதனை

உலகம் கண்ட மிகப்பெரிய சமூக சீர்திருத்த வாதிகளில் வில்லியம் பூத் என்பவர் ஒருவர். இவரே "இரட்சண்யசேனை" என்ற இயக்கத்தை ஆரம்பித்தவர்.

இராணுவ வீரர்களைப் போன்ற உடை, பதவிகள் போன்றவை இரட்சண்ய சேனை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. ஒரு சேனை அணிவகுத்து எதிரியின் மீது போர் தொடுக்க செல்வது போல் ஒரு பட்டணத்தில் நற்செய்தி ஊழியம் செய்ய இவர்கள் புறப்படுவார்கள்.

ஆரம்பத்தில் "கிறிஸ்தவ மிஷன்" என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம், இரட்சண்ய சேனையாக மாறி, வில்லியம் பூத் காலத்திலேயே 71 தேசங்களில் பரவியது. லட்சக்கணக்கான கிறிஸ்துவை அறியாத மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினர்.

ஏழை, எளிய மக்களின் கஷ்டங்களைக் கண்ட வில்லியம் பூத் அவர்களுக்கு உதவி செய்ய ஆரம்பித்தார். விழுந்து போன சமுதாயத்தை சீர்தூக்கவும், வாழ்க்கையில் புறக்கணிக்கப்பட்ட ஏழை மக்களை உயர்த்தவும், "இருளடைந்த இங்கிலாந்து" என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

1855ஆம் ஆண்டு கேத்தரினை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டு, அவர் கொடுத்த ஊக்கத்தினால் ஆத்தும ஆதாய வீரராகவும், இங்கிலாந்தின் சிறந்த எழுப்புதல் வீரராகவும் மாறினார். திறந்வெளி ஊழியம், தொழிற்சாலை ஊழியம், குடிசைப்பகுதி ஊழியம், குடிகாரர்கள் மத்தியில் ஊழியம் என பலவகையான ஊழிய முறைகளை மேற்கொண்டார்.

வில்லியம் பூத் அவர்களால் 27 மில்லியன் மக்களுக்கு உணவும், 11 மில்லியன் ஏழை குடும்பங்களுக்கு வீடுகளும், 9ஆயிரம் பேருக்கு வேலைகளும் கிடைத்தன.


இரட்சண்ய சேனையின் ஒப்பற்ற தளபதியாகவும், ஏழைகளின் தலைவனாகவும் வாழ்ந்த ஜெனரல் பூத் உண்மையிலேயே வியத்தகு மனிதர். இவர் பிறந்தது இதே நாளில் தான்.

**அன்பரே! கிறிஸ்துவின் திட்டத்தில் உமது சாதனை சிறப்பானதாக உள்ளதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** எந்த அளவுக்கு ஒருவரின் அர்ப்பணிப்பு உள்ளதோ, அந்த அளவுக்கு ஒருவரின் ஆற்றலின் அளவும் இருக்கும் – வில்லியம் பூத்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஏப்ரல் 10**

# குறுக்கெழுத்துப் போட்டி - 78



## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

04. மனாசே (11நாளா 33:1)
06. ரூபன் (உபா 11:6)
09. ஆகாப் (1இரா 21:20)
10. பெனாயா (1நாளா 11:23)
12. நீதியின் ராஜா (எபிரெ 7:2)

**வலமிருந்து இடமாக**

02. இசக்கார் (ஆதி 49:14)
05. சமாரியா (எசேக் 23:4)
08. யோனத்தான் (1சாமு 14:43)
11. பிரயாசம் (நீதி 10:16)

**மேலிருந்து கீழாக**

01. காலேப் (எண்ணா 13:6)
03. அகசியா (11இராஜா 9:27)

**கீழிருந்து மேலாக**

07. அப்சலோம் (11சாமு 18:9)
12. நீதிமான்கள் (மத் 13:43)
13. தொபியா (நெகே 4:3)



# குறுக்கெழுத்துப் போட்டி – 79

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | |
| | | | | | 03 | | | 02 |
| | 04 | | | | | | | |
| | | | | | | 05 | | |
| | | | | | | | 06 | |
| | | | 07 | | | | | |
| | | | | | | | 08 | |
| | | 09 | | | | | | |
| 10 | | 11 | | | | | | 12 |



குறிப்பு:- 12 வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

- நன்றி -

## இடமிருந்து வலமாக

01. இச்சித்த ஜனங்களை அடக்கம்பண்ணிய இடம்
04. இவன் சிமியோன் கோத்திரத்தின் தலைவன்
07. யூதர்மேல் கையைப் போட எத்தனித்தபடியால் மரத்திலே தூக்கிப்போடப்பட்டவன்
09. "அரியேல்" என்பதன் இன்னொரு பெயர் (குழம்பியுள்ளது)

## வலமிருந்து இடமாக

03. "செத்தநாயைப் போலிருக்கிற என்னை நீர் நோக்கிப் பார்க்கிறதற்கு உமது அடியான் எம்மாத்திரம்" என்று கூறியவன்
05. "என் நினைவுகளால் மிகவும் கலங்கினேன், என் முகம் வேறுபட்டது" எனக்கூறியவன்
06. பினேகாசின் அப்பா
08. ஆகாகை கில்காலில் துண்டித்துப்போட்டவன்
12. இவன் மிகாயாவை கன்னத்தில் அடித்தான்


## மேலிருந்து கீழாக

02. யோசபாத் இவரைக் கர்த்தருடைய சிநேகிதன் என்று கூறினான்
04. இங்கே ராகேலின் கல்லறை இருந்தது
06. இவன் கல்லறையில் போடப்பட்ட மனுஷன் உயிர்த்தெழுந்தான்

## கீழிருந்து மேலாக

06. அகாவா நதியண்டையிலே உபவாசத்தைக் கூறியவன்
10. ......... என்றும் நிலைத்திருக்கும், பொய் நாவோ ஒரு நிமிஷமாத்திரம் இருக்கும்
11. யோதாமின் தாய்.

# வினா விடை - 81



*01.* மந்தையின் முன் நடக்கும் கடாக்களைப் போல இருங்கள் என்று சொல்லப்பட்டிருப்பதெங்கே?

*02.* உனக்கு பரிபூரண நன்மை உண்டாகக் கட்டளையிடுவார் என்றது யார்?

*03.* அக்கிரமத்திற்கு திரும்பாதபடி எச்சரிக்கையாயிரும் என்று சொன்னது யார்?

*04.* உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்றது யார்?

*05.* நீர் நீதிமானாயிருப்பதினால் சர்வவல்லவருக்கு நன்மையுண்டாகுமோ என்றது யார்?

*06.* உன் ஆட்டு மந்தைகளையும் ஆசீர்வதிப்பார் என வாசிப்பதெங்கே?

*07.* கர்த்தர் எனக்கு நன்மை செய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றது யார்?

*08.* தீட்டானதொன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு என்றது யார்?

*09.* நீ எனக்கு நன்மை செய்ததை இன்று விளங்கப்பண்ணினாய் என்றது யார்?

*10.* காணிக்கைக்கு ஏற்ற பலன் தரும் வயல்கள் இராமலும் போவதாக என்று சொன்னது யார்?

---

**காரைநகர்**
01. அ.எஸ்தர்
02. நா.அன்னாள்
03. பா.அனுகரன்
04. பா.அனுசியா

**பள்ளிக்குடா**
05. அ.சலிஸ்ரா
06. இ.ஜெறாட் எபினேசர்
07. இ.லக்சிகா
08. அ.கார்த்திகா
09. ய.றொக்சிகா
10. ஜெ.தமிழ்நிலா
11. இ.கிருசாந்

**பாண்டவெட்டை**
12. சி.ரதீஸ்வரி
13. வ.ஜோகனன்
14. வ.ஜெயாழினி
15. வி.கெற்சியா
16. வி.தயாழினி
17. ம.நிம்சிகா *
18. ம.சிவகௌரி *
19. செ.எமிமாள்
20. செ.நகுலா
21. செ.டிசேந்தன்
22. எம்.ஜெசிந்தா
23. க.இராஜேஸ்வரி
24. க.பிரியதர்சினி
25. அ.துவாரகன் •

**நாவற்குழி**
26. சூ.ஜான்சி *

**கனடா**
27. குகன் குடும்பம்

**சரியான விடை எழுதியவர்கள் குறுக்கெழுத்துப் போட்டி - 78, வினா விடை - 80**

• குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்







பரிசுத்த வேதாகமத்திலே ஆண்டவருடைய அபிஷேகம் அநேக இடங்களில் வெளிப்பட்டிருப்பதை காணலாம். தேவனுடைய ஊழியர்கள் அனேகர் தேவனுடைய அபிஷேகத்தோடு ஜீவித்தார்கள். அந்த அபிஷேகத்தோடு ஜீவிக்க அவர்கள் செய்த அர்ப்பணங்கள் அதிகமாக இருந்தது. அதைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் எம்மோடு கூட இச் சஞ்சிகை ஊடாக பேசுவாராக. தேவனுடைய பிள்ளைகளாகிய ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் தம்முடைய அன்பின் அபிஷேகத்தை ஊற்றியிருக்கிறார். விசேஷமாக பரிசுத்த ஆவியானவரின் ஊற்றுதலுக்குப் பின்பதாக ஜீவிக்கிற திருச்சபையிலே தேவனுடைய அபிஷேகம் நிறைவாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் பார்க்கிற போது தேவனுடைய அக்கினியோடு கூட தொடர்புபட்ட அல்லது ஆண்டவருடைய அக்கினியை வானத்திலிருந்து இறக்கக்கூடிய, அக்கினியோடு கூட வானத்திற்கு போகத்தக்க ஒரு மனுஷன் இருந்தான். அவன் தான்: “எலியா தீர்க்கதரிசி”.

ஒருமுறை எலியா தீர்க்கதரிசி தனியாக நின்று பலி செலுத்துகிற அந்த நேரத்திலே தேவனை நோக்கி ஜெபிக்கிறார். **1இராஜாக்கள் 18:36, 38 (36.) அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக் கோபுக்கும்தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களை யெல்லாம் உம்முடைய வார்த்தையின் படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும். 38. அப்பொழுது: கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலி யையும், விறகுகளையும், கற்களை யும், மண்ணையும் பட்சித்து, வாய்க் காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப் போட்டது. கர்த்தருடைய அக்கினி இறங்கி எலியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுத்தது.**

இன்றைக்கும் அதைவிட அதிகமான பதில்களை என்னுடைய வாழ்விலும் உங்களுடைய வாழ்விலும் கர்த்தர் கொடுக்கிறார். இயேசு மெய் யான தேவன். அவரே தேவன். நாம் அவருடைய பிள்ளைகள் என்பதை நிருபிக்க எத்தனையோ தடவைகள் கர்த்தர் எமக்கு பதிலைத் தந்திருக் கிறார். எலியாவின் வாழ்க்கையில் பார்க்கிற போது பிரத்தியட்சமாக பார்க்கும் படியாக அக்கினி இறங்கி வந்தது. பரிசுத்த ஆவியானவரின் அக்கினி எம்மில் அசைவாடிக் கொண்டிருக்கிறது. ஆனால் பழைய ஏற்பாட்டில் எலியாவின் வாழ்வில் காணப்பட்ட வெளிப்படையான அடை யாளத்தைக் குறித்து நான் பேசுகி றேன். எலியா மலையின் மேல் இருக் கிறார். அவரைக் கேலி செய்யும் படியாக அல்லது அவர் ஆராதிக்கும் தேவனை சந்தேகிக்கும் முறையோடு கூட வந்து அவரை கேள்வி கேட்ட போது, அவர் சொல்கிறார்; **"நீங்கள் சொல்வது போல் நான் உண்மை யான தேவனுடைய மனுஷனாக இருந்தால் அக்கினி இறங்கி உங் களைப் பட்சிக்கட்டும்." உடனே அக்கினி இறங்கி அவர்களை** பட்சித்துப்போட்டது. எலியா பரலோகம் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் வந்த போதுகூட **அக்கினி மயமான இரதத்திலே** சுழல்காற்றில் எடுத்துக் கொள்ளப்பட்டார்.

எலியாவின் வாழ்வு கர்த்தரின் **அக்கினியுடன்** தொடர்புபட்டது. தேவ னால் பிரித்தெடுக்கப்பட்ட மனிதனாக எலியா இருந்தாலும் எலியாவைக் குறித்து வேதாகமம் என்ன சொல்கிறது என்றால்: **யாக்கோபு 5:17a எலியா என்பவன் நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும்,** எலியா எம்மைப் போல பாடுள்ள மனுஷனாயிருந் தாலும் தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை, அபிஷேகத்தை காத்துக் கொண்டான். தேவ பிள்ளைகள் பாடுகள், உபத்திரவங்கள் மத்தியிலும் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்து தான் அவர்களுடைய முடிவில் அபிஷே கம் நிறைவேறுகிறது. தேவன் நமக்கு

பலவிதமான பதில்களைக் கொடுத் திருக்கலாம் ஆனால் எம்முடைய முடிவு மகிமையாக இருக்க வேண்டு மென்றால் பாடுள்ளவர்களாக இருந் தாலும் கர்த்தர் கொடுத்த விலையேறப் பெற்ற காரியத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். உலகத்தில் இருப்பவர் களைப் பார்க்கிலும் நாம் பாக்கிய முள்ளவர்கள். விசேஷமானவர்கள். அவர்கள் தெரிந்து கொண்ட பாதையை விட நீங்கள் தெரிந்து கொண்ட பாதை அது ஜீவனுள்ள பாதை.

ஆகவே கர்த்தர் ஜீவனுடைய அபிஷேகத்தை, வல்லமையான கிருபையை, பரலோகம் என்ற பொக்கிஷத்தை, பரிசுத்த ஆவி என்ற முத்திரையை எமக்கு கொடுத்திருக்கிறார். இவற்றை ஒரு போதும் இழந்து போகாதபடி காத்துக் கொள்ள போராட வேண்டும். எலியாவின் வாழ்வில் இரண்டு விதமான சோதனைகள் வந்தது. அந்த இரண்டு விதமான சோதனைகளிலும் அவர் எப்படி நடந்து கொண்டார் என்பதை தான் தேவன் எம்மோடு கூட பேசி வெளிப்படுத்து வாராக. இக்கட்டான சூழ்நிலைகள், நெருக்கம், பாடுகள் எலியாவுக்கு வந்தது. அவைகள் மத்தியிலும் அவர் அவற்றுக்கு சரியாக முகம் கொடுத்தமையால் தான் கர்த்தர் அவரை முடிவில் அக்கினியில் எடுத்துக் கொண்டார். எனவே அக் காரியங்களைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம்.

## 01. காகத்தால் போஷிக்கப்பட்ட போது முறுமுறுக்கவில்லை

**1இராஜாக்கள் 17:1-6 (1.) கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான். 2. பின்பு கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர்: 3. நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொண்டிரு. 4. அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார். 5. அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்தான். 6. காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்தது. தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான்.**

மூன்றரை வருடங்கள் கடும் பஞ்சம், பட்டினி ஏற்படுகிறது. நான் கர்த்தருடைய பாதத்திலிருந்து ஆயத்தப்படுத்திய ஒரு சில காரியங்களையே கூறுகின்றேன். அக்கினி அபிஷேகம்

பெற்றவருக்கு கர்த்தர் கொடுத்த சாப்பாடு றொட்டியும் இறைச்சியும். *ஒரு வாரத்திற்கு தொடர்ந்து காலை உணவு பாண் என்றால் எமக்குள் வருவது முறுமுறுப்பு.* எலியா தன்னுடைய வாழ்க்கையில் கர்த்தர் கொடுத்த அபிஷேகத்தை முறுமுறுக்காமல் காத்துக்கொண்டான். ஒரேவிதமான உணவு, ஒரேவிதமான காரியம் அவனுடைய வாழ்க்கையில் திரும்ப திரும்ப வந்த போதும் அவன் முறுமுறுக்கவில்லை. ஆனால் இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையில் பார்க்கிற போது எதையெடுத்தாலும் உடனே முறு முறுப்பு, குறை சொல்லு தல், குற்றம் பிடித்தல். ஆனால் திருச்சபைக்குள் வந்து தேவனை துதிக்கும் போது எம்முடைய சத்தத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது!. இதைத்தான் நாம் அபிஷேகம் என்று நினைக்கிறோம்.

எங்கே ஒரு மனுஷன் தன் ஆத்துமாவை, ஆவியை அடக்கி முறுமுறுக்காமல் தன்னுடைய வாழ்க்கையை தேவனுடைய பாதத்தில் காத்துக் கொள்கிறானோ அவனுக்குள் தான் கர்த்தருடைய அபிஷேகம் நிலைத்திருக்கிறது. இப்போது இருக்கிற நிலையில் யாரெல்லாம் திருப்திப் பட்டுக்கொள்கிறோம்? இப்போது கர்த்தர் என்னை நன்மையான வழியில் தான் நடத்துகிறார் என்று எத்தனைபேர் நம்புகிறீர்கள்? *பக்கத்து வீட்டிற்கு ஆசீர்வாதம் வந்தால் தான் தெரியும் எங்களுக்குள் இருக்கிற அபிஷேகம்.* எங்களுக்குள் இருக்கிற ஆவியானவருடைய அபிஷேகம் நம்மை வழிநடத்தும். பிரியமானவர்களே நாம் எதைக் குறித்தும் முறுமுறுக்கக் கூடாது. ஜெபிப்போம், அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தைகளைப் பேசுவோம். எப்போதும் எல்லாவற்றிலும் கேள்வி கேட்பது, பிடிவாதம், குற்றம் குறை பிடிப்பது. ஆனால் சொல்வது நாங்கள் அக்கினியால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள், எங்களுக்குள் வல்லமை இருக்கிறது என்று எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். தேவனுடைய அபிஷேகம் உங்களுக்குள் இருக்குமென்றால் இன்று உங்களுக்கு இருக்கிற குறை அது குறை அல்லமாறாக அது நிறைவானது என்ற எண்ணம் இருக்கும். ஒருவேளை பணத்தேவையாக, வியாதியாக கூட இருக்கலாம். அல்லது வீட்டிலே தொடர்ச்சியாக பிரச்சனையாக இருக்கலாம் ஆனால் எல்லாவற்றைப் பார்க்கிலும் சர்வவல்லமையுள்ள தேவன் என்னோடு கூட இருக்கிறார். அது தான் அவர் சொன்னார்: **நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்து போம்.** அந்த நிறைவான இயேசு எமக்குள் இருப்பாராக இருந்தால் எமக்குள் ஒரு குறைவும் இல்லை.

தொடர்ந்து ஒரே உணவு. அதுவும் அசுத்தமான பறவையாகிய காகம் கொடுக்கிறது. அக்கினி அபிஷேகம் பெற்ற மனித னுக்கு காகத்தின் மூலம் தேவன் உணவு கொடுத்தார். ஏன் கர்த்தர் சுத்தமான பறவையை இதற்கு பயன்படுத்தக்கூடாது? என்று கூட எலியா சிந்தித்திருக்கலாம்.

ஆனால் இதன் மத்தியிலும் எலியா மனக்கசப்பு அடையவில்லை. அருமை யான தேவனுடைய பிள்ளைகளே, உங்களுடைய சூழ்நிலைகளை உங்களால் சகிக்க முடியாவிட்டாலும், ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் கர்த்தர் உங்களை வழிநடத்துகிறார் என்ற திருப்தியோடு இருக்கிற போது தான் கர்த்தருடைய மகிமையை உங்களால் காண முடியும். விலையேறப் பெற்ற அபிஷேகம், வல்லமை நிறைந்த ஆசீர்வாதத்தை உங்களுக்காய் தேவன் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார். அதற்கு முன்பதாக பாடுகளுக் கூடாக, உபத்திரவங்களுக் கூடாக, கண்ணீர்களுக்குள்ளாக உங்களை நடத்திச் செல்வார். ஆனால் எந்த சூழ்நிலையிலும் இயேசு என்னை கைவிட்டார் என்ற வார்த்தையை நீங்கள் ஒரு போதும் கூறக்கூடாது. மாறாக எல்லாவற்றிற்காகவும் எப்போதும் நன்றி செலுத்த வேண்டும். முறுமுறுப்புக்களை அகற்றி விடுங்கள், ஒருவரில் ஒருவர் குற்றம் பிடிப்பதை நிறுத்துங்கள். ஏனென்றால் எங்களுக்குள் ஜீவனுள்ள தேவனுடைய வல்லமை இருக்கிறது.

வன்னியில் எமது கிளைச் சபை ஒன்றிற்கு ஒருவர் விழிப்பிரவு ஜெபத்திற்கு வந்து விட்டார். விழிப்பிரவு ஜெபமும் முடிந்து அவர் வீட்டிற்கு சென்று பார்த்த போது, யானை வந்து அவருடைய வீட்டை இடித்து விட்டு சென்றுவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்திருப்போம்? ஜெபத்திற்குத் தானே சென்றேன், ஏன் இப்படி நடந்தது? தூதர்கள் பாதுகாத்திருக்கலாமே? என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்டிருப்போம். ஆனால் அந்த மனிதன் தன் வீட்டைப் பார்த்து விட்டு கூறினார்: நாங்கள் இரவு ஜெபத்திற்கு செல்லாமல் வீட்டில் இருந்திருந்தால் எல்லோரும் மரித்துப் போயிருப்போம் என்று. இன்றைக்கு எமக்கு வருகிற பாடுகள், பிரச்சனைகளை நாம் எப்படி பார்க்கிறோம்? அதிலே தான் தேவனுடைய அபிஷேகத்தைக் காத்துக் கொள்ளுதல் இருக்கிறது. எங்களுடைய கிளைச்சபையில் சொன்னேன், யாரும் பாட்டுபாடாமல், கண்களைத் திறக்காமல் அரை மணி நேரம் தேவனைத் துதிக்க வேண்டும் என்று. பிற்பாடு ஒரு வயதில் முதிர்ந்த சகோதரர் வந்து கூறினார்: போதகரே நான் அரை மணி நேரம் நீங்கள் கூறிய வாறு தேவனைத் துதித்தேன் என்று. அது நல்ல காரியம் தான். ஆனால் அபிஷேகம் என்பது கண்ணை மூடுவதில் இல்லை. மாறாக நீங்கள் முறுமுறுக்காமல் கர்த்தர் செய்வதெல்லாம் நன்மைக்கே என்று எப்போது மனதிலே நினைக்கிறீர்களோ அப்பொழுது தான் தேவனுடைய மகிமை வெளிப்படும்.

நாம் அவசரப்பட்டு பிரயாணப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கே வீதி சமிக்ஞை விளக்கு பச்சையாக இருந்தது

நாம் அருகில் செல்லும் போது சிவப்பாக மாறிவிடுகிறது அதிலே ஒரு முறுமுறுப்பு. எதெற்கெடுத்தாலும் குழப்பம், பிரச்சனைப்படுகிறவர்கள் தான் என்மேல் தேவனுடைய அக்கினி இருக்கிறது என்று சொல்கிறார்கள். இரண்டு ஊழியர்கள் ஊழியம் செய்யும்படியாய் ஒரு ஊரிற்கு சென்றார்கள். இருவரானபடியால் அவர்கள் அங்கே தற்காலிக கூடாரம் ஒன்றை அமைத்து இருவரும் அதற்குள் படுத்துக் கொண்டார்கள். திடீரென ஒருவர் எழுந்து பார்த்த போது மேலே இருந்த தறப்பாளை காணவில்லை. உடனே பக்கத்தில் படுத்திருந்த ஊழியரை எழுப்பி காண்பித்தார். அவர் வானத்திலே சந்திர, நட்சத்திரங்களைப் பார்த்த போது: ஆண்டவரே சந்திரனுக்காக, நட்சத்திரங்களுக்காக உமக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னார். அப்பொழுது மற்றவர் சொன்னார்: சந்திரன், நட்சத்திரங்களைப் பார்க்காதே, தறப்பாள் களவு போய்விட்டது என்றார். இங்கே ஒருவர் களவாடப்பட்டதைப் பார்த்தார், மற்றவர் கர்த்தரைப் பார்த்தார். எமக்குள்ளும் பாடுகள், பிரச்சினைகள், துன்பங்கள் தான். ஆனால் அந்த நேரத்தில் கள்வனையோ, கொள்ளைக்காரனையோ அல்ல **எமக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக எங்கள் கண்களை ஏறெடுக்க வேண்டும்.** ஆகவே எவ்வளவு பாடுகள்பட்டாலும் கவலைப்படாதீர்கள். யார் உங்களைத் தூற்றினாலும் கவலைப்படாதீர்கள். எலியா முறுமுறுக்காமல் தன்னை தாழ்த்திய படியால் தேவன் எலியாவுக்கு உதவி செய்தார்.

## 02. விதவையால் பராமரிக்கப்படுகிற போது தன்னுடைய சரீரத்தை காத்துக் கொண்டான்.

யாரோ, எங்கேயோ சமைத்த சாப்பாட்டை எதுவுமே தெரியாமல் காகம் கொடுத்ததை சாப்பிட்டார். ஆனால் இப்பொழுது மனிதர் மூலம் நேரடியாக கிடைக்கும் சந்தர்ப்பத்தை தேவன் கொடுக்கிறார். **1இராஜாக்கள் 17:7-9 (7.) தேசத்தில் மழை பெய்யாத படியினால், சிலநாளுக்குப்பின்பு அந்த ஆறு வற்றிப் போயிற்று. 8. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர்: 9. நீ எழுந்து சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றான்.** அபிஷேகம் பெற்றவரை ஆண்டவர் எப்படியெல்லாம் வழி நடத்துகிறார் என்று பாருங்கள். ராஜாவின் வீட்டிற்கோ, பணக்காரர் வீட்டிற்கோ அனுப்பவில்லை. மாறாக ஏழை வீட்டிற்கு அனுப்பினார். **அதிகமாக கர்த்தர் ஒன்றும் இல்லாதவர்களை நேசிக்கிறார். உங்களிடம் கூட ஒன்றும் இல்லாமல் இருக்கலாம், ஆனால் கர்த்தர் உங்களை நேசிக்கிறார்.** ஒருவர் இவ் வசனங்களுக்கு இவ்வாறு விளக்கம் கொடுக்கி

றார்: அந்த விதவை தன்னிடம் கடைசியாக இருந்த மாவுக்காக விறகு பொறுக்குகிற போது அவள் நஞ்சுக் கொடிகளை பொறுக்கி அதற்குள் போட்டு தாங்கள் செத்துப் போக வேண்டும் என்று தான் அதை செய்கிறாளாம் என்று. அந்த கூற்று உண்மையாக இருந்தால் அவள் **மரணத்திற்கு நேராக போய்க் கொண்டிருந்த தன் மகளை நேசித்தார். இந்நேரத்தில் தற்கொலையின் ஆவியோடு யாராவது போராடிக் கொண்டிருக்கலாம். ஆவியானவர் உங்களோடு தான் பேசுகிறார். நீங்கள் தற்கொலை செய்து மரிக்கத்தேவையில்லை. இயேசு உங்களுக்கு வாழ்வு கொடுப்பார்.**

விதவை வீட்டிற்கு எலியா செல்கிறார். ஆறு மாதங்கள் காகம் கொடுத்த உணவும், மூன்று வருடம் விதவை வீடும் என்று வைத்துக் கொண்டால், அவள் -விதவை, எலியா - தீர்க்கதரிசி; பஞ்சும் நெருப்பும் போன்று. இவ் மூன்று வருடங்களும் எலியா பாவம் செய்ய வில்லை, அவர் தன்னுடைய சரீரத்தை காத்துக் கொண்டார். **லூக்கா 4:25-26 (25.) அன்றியும் எலியாவின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள் அநேகம் விதவைகள் இருந்தார்கள். 26. ஆயினும் எலியா சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை.** இந்த வார்த்தை மூலம் ஆவியானவர் என்ன சொல்கிறார் என்றால்; எலியாவையும் அந்த விதவையும் தேவன் நம்பினார். இரண்டு பேரும் தங்கள் பரிசுத்த வாழ்க்கையைக் காத்துக் கொள்வார்கள் என்று நம்பினார்.

**எங்களுடைய சரீரத்தைக் குறித்தும் ஆண்டவருக்கு நம்பிக்கை இருக்க வேண்டும்.** *எங்களுடைய கிளைச்சபையிலே ஒரு விதவையான சகோதரி இருந்தார். அவர் ஒழுங்காக ஆராதனைக்கு வருவார். திடீரென அவர் சபைக்கு வருவதில்லை. விசாரித்த போது கூறினார்கள்: அவர் வீட்டிற்கு இப்போது ஒரு போதகர் ஊழியத்திற்காக வந்து செல்கிறார். அந்த வீட்டில் இப்போது கூட்டங்கள் நடைபெறுகிறது என்று. அந்த சகோதரியின் வீடு எமது சபை இருக்கும் இடத்திலிருந்து மூன்று அல்லது நான்கு வீடுகளுக்கு அப்பால் இருந்தது. சில காலங்கள் சென்ற பிற்பாடு திருவிருந்து ஆராதனைக்காக அந்த கிளைச்சபைக்கு மறுபடியும் செல்லும் போது அறிந்து கொண்டேன், அந்த போதகர் அந்த விதவை சகோதரியை திருமணம் செய்து கொண்டார் என்று.* நம்முடைய சரீரத்தை நாம் அடக்கியாளாவிட்டால், நம்முடைய சரீரத்தை தேவனுடைய சமூகத்திலே

ஒப்புக் கொடுத்து பரிசுத்தமாய் காக்கா விட்டால் தேவனுடைய அபிஷேகம் ஒரு போதும் நிலைத்திருக்காது.

எங்களை நாங்களே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. **ஒருவனுக்கு ஒருத்தியை அல்லவா தேவன் படைத்தார் என்று மல்கியா தீர்க்கதரிசி கூறுகிறான்.** தேவனுடைய பிள்ளைகள் ஒருவருக்கும் ஆண்டவர் கொடுக்கிற நல்வார்த்தை: **உங்களுடைய வாழ்க்கையிலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பிரமாணம் தான் இருக்க வேண்டும்.** இந்தக் காலத்தில் ஜனங்களுக்குள் அதிகமாக விபச்சாரத்தின் ஆவி, குடிவெறி, உண்மையற்ற காரியங்கள் அதிகமாக காணப்படுகிறது. சிலவேளை இந்தக் காரியங்களை செய்துவிட்டும், சபைக்கு வந்து திரும்பி செல்கின்ற போது சபையில் ஆவியானவர் இல்லை என்று சொல்கிறோம். சனிக்கிழமை முழுவதும் ஆயத்தமாகி ஞாயிறு ஆராதனைக்கு வந்தால் தான் ஒரு அற்புதத்தைக் காணமுடியும். ஆனால் சனிக்கிழமை முழுவதும் சுற்றுலா சென்றுவிட்டு ஞாயிறு ஆராதனைக்கு வந்தால் எப்படி தேவனுடைய பிரசன்னம், மகிமையை உணர்ந்து கொள்ள முடியும்?

ஊழியத்தில் அனேக காரியங்களை பார்க்கிறேன், உண்மையற்ற காரியங்கள். கணவன் - மனைவி போன்று திரிவார்கள். ஆனால் மறைவில் எத்தனையோ விபச்சாரங்கள். இந்த இடத்தில் உங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுக்காதவர்களும் இருக்கிறீர்கள் என்பது ஆண்டவருக்கு தெரியும். ஆகவே இன்றைக்கே மனந்திரும்பும்படியாகத்தான் இயேசு உங்களோடு பேசுகிறார். **கர்த்தருடைய வார்த்தையை தூக்கிய நாம் ஆண்டவருடைய வார்த்தைக்கு துரோகம் பண்ணக்கூடாது.** எங்களுடைய தெய்வம் பரிசுத்தர். அவர் சொன்னார்: **"நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் பரிசுத்தமாயிருங்கள்"** என்று. கணவன் குடிகாரன், உதவாதவனாக இருக்கட்டும் ஆனால் நீ உன் பரிசுத்தத்தைக் காத்துக் கொள். விபச்சாரம், காமவிகாரம், அசுத்தங்களிலிருந்து நாம் மனந்திரும்ப வேண்டும்.

கலாத்தியர் புத்தகத்தில் மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து சொல்லப்படுகிறது. அவைகளில் ஒன்று களியாட்டம். களியாட்டம் என்றால் நம்மை சந்தோஷப்படுத்துகிற ஆனால் தேவனுக்கு பிரியமற்றதாக காணப்படும் அனைத்தும் களியாட்டம் ஆகும். அற்ப நேர சுகத்திற்காக லேகியம் போடுதல், குடித்து வெறித்தல், வெற்றிலை போடுதல், சினிமா பார்ப்பது, ஒரு ஆணோடு அல்லது ஒரு பெண்ணோடு பேசும் போது அது சந்தோஷத்தைக் கொடுக்கிறது ஆனால் அது தேவனைத் துக்கப்படுத்தும் என்றால் அது களியாட்டம். ஒரு *சகோதரன் கூறினார்: அவர் திருமணமானவர், பிள்ளைகளும் அவர்களுக்கு இருக்கிறார்கள். அவருக்கு திடீரென ஒரு தவறிய அழைப்பு (Missed Call) வந்ததாம். அதில் ஒரு பெண் பேசினார். அன்றிலிருந்து தொடர்ந்து தொலைபேசி பேச்சுத்தான். பின்னர் அவர் மனந்திரும்பி அறிக்கையிடுகிற போது சொன்னார்: ஒரு நாள் அந்த பெண் தொலைபேசி*

அழைப்பு எடுக்காவிட்டால் அவருக்கு அன்று விடிந்தது போன்றே இருக்கா தாம். ஆனால் அவருக்கு அந்த பெண்ணின் முகம் தெரியாது. அவள் கிழவியோ, குமரியோ தெரியாது. ஆனால் இவர் ஒழுங்காக ஆராதனைக்கு வருவார், காணிக்கை கொடுப்பார், திருவிருந்து எல்லாம் எடுப்பார். எவ்வளவு பாவங்களை மறைத்து வைத்துக் கொண்டு ஆண்டவருடைய சமூகத்திற்கு வந்து ஆராதிக்க எப்படி தைரியம் வருகிறது? அந்த தேவன் எவ்வளவு கிருபையாய் எம்மோடு கூட இருக்கிறார். ஆகவே அருமையானவர்களே எம்முடைய சரீரத்தை பாவத்திற்கு ஒப்புக் கொடுக்கக் கூடாது.

**1இராஜாக்கள் 19:1,3,5 (1.) எலியா செய்த எல்லாவற்றையும், அவன் தீர்க்கதரிசிகளெல்லாரையும் பட்டயத்தாலே கொன்றுபோட்ட செய்தி அனைத்தையும் ஆகாப் யேசபேலுக்கு அறிவித்தான். 3. அவனுக்கு அது தெரிந்த போது எழுந்து, தன் பிராணனைக் காக்க யூதாவைச் சேர்ந்த பெயர்செபாவுக்குப் புறப்பட்டுப்போய், தன் வேலைக்காரனை அங்கே நிறுத்திவிட்டான். 5. ஒரு சூரைச்செடியின் கீழ்ப்படுத்துக் கொண்டு நித்திரைபண்ணினான்; அப்பொழுது ஒரு தூதன் அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம் பண்ணு என்றான்.** இரண்டு காரியத்திலும் அபிஷேகத்தைக் காத்துக் கொண்டதினால்; **அவன் நித்திரை பண்ணிக் கொண்டிருந்த போது தேவன் தம்முடைய தூதர்கள்மூலம்அவனை போஷித்தார்.** ஆண்டவருடைய உயர்வுகள், ஆசீர்வாதங்கள் படிப்படியாக வருகிறது. தேவனுடைய காரியம் எம்மூலம் வெளிப்பட வேண்டும் என்றால் அதற்கு அதிக கிரயங்கள் கொடுக்க வேண்டும்.

பிரியமானவர்களே, பூரணமடையும் வரை அந்த ஆசீர்வாதம் உங்களைத் தேடி வந்து கொண்டேயிருக்கும். அதுவரை பாடுகள், சோதனைகள் வரும். அவற்றின் மத்தியிலும் முறுமுறுக்காமல், பாவம் செய்யாமல் அழைத்த தேவனுக்கு உண்மையாக இருப்பீர்களாக இருந்தால் உங்களுக்கு விரோதமாய் குறை சொன்னவர்கள், துரோகம் பண்ணியவர்கள் மரித்துப்போகலாம். ஆனால் உன்னை உயர்த்துகிற தேவன் உயிர் உள்ளவராய் இருக்கிறார். அவர் நிச்சயமாய் உங்களை உயர்த்துவார், ஆசீர்வதிப்பார். உங்கள் கண்கள் பெரிதான நன்மையைக் காணத்தக்கதாய் கர்த்தர் கிரியை நடப்பிப்பார்.

**11இராஜாக்கள் 2:13-14 (13.) பின்பு அவன் எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப் போய், யோர்தானின் கரையிலே நின்று, 14. எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து: எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாகப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்.** அபிஷேகத்தைக் காத்துக் கொண்ட மனிதனின் சால்வை கூட அற்புதத்தைக் கொண்டு வந்தது.

---



0772002351 Smart phone

# பின்வாங்காதே

## வேதப்பகுதி: நெகேமியா 2:17–20

சேரிப்பகுதியில் உள்ள ஏழை மக்களுக்கு உதவிசெய்யும் குழுவில் பென், சாம், ராபி ஆகியோர் இணைந்தனர். இவர்கள் பணத்திற்காகத் தான் சேவை செய்கின்றார்கள் என்று சிலர் சொன்னார்கள்.



- *எதற்கு இந்த கெட்ட பெயர் என்று பென் விலகி விட்டான்.*
- *தவறாகப் பேசினவர்களை சாம் கடுமையாகக் கண்டித்தான்.*
- *நான் செய்வது நல்ல பணி, கர்த்தர் எல்லாம் அறிவார், எனவே நான் தொடர்ந்து சேவை செய்வேன் என்றான் ராபி.*

நீ அந்தக் குழுவில் இருந்தால் என்ன செய்திருப்பாய்?

ராபிதான் சரியாக செயல்பட்டான். நல்லதை செய்யும் போது நாலு பேர் நாலுவிதமாகச் சொல்வார்கள். நெகேமியாவுக்கு எதிராக தவறாகப் பேசப்பட்ட போது நெகேமியா பின்வாங்கவில்லை. நீ உண்மையாயிருந்தால் யார் என்ன சொன்னாலும் நல்லதை தொடர்ந்து செய்.

**சிந்தனைக்கு:–** நல்லதை செய்வதைத் தடுப்பதே பிசாசின் நோக்கம். எனவே பிசாசின் சோதனையை ஜெயித்து நன்மை செய்ய வேண்டும்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — ஜுன் 30

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)
## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை **(Sri Lanka)** | **220.00** |
| இந்தியா **(India)** | **390.00** |
| கனடா, அமெரிக்கா **(Canada & USA)** | **840.00** |
| சிங்கப்பூர், மலேசியா **(Singapore & Malaysia)** | **420.00** |
| மத்திய கிழக்கு நாடுகள் **(Middle East Countries)** | **510.00** |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா **(Germany, England, Italy & Australia)** | **720.00** |

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

---

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................................................

முகவரி:........................................................................

..................................................................................

..................................................................................

## உங்களுக்காகவே!

பிரதி மாதந்தோறும் இறுதி வெள்ளிக் கிழமைகளில்

மாலை 5:00 மணிக்கு

# சீயோன் தேவாலயம்

24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள எமது
பிரதான ஆலயத்தில்

- வியாதிப்பட்டவர்கள்
- தேவையுள்ளவர்கள்
- பிசாசின் பிடியில் உள்ளவர்கள்



போன்றவர்களுக்கு விசேஷித்த விண்ணப்ப ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது.
இதில் கலந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

To:..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................
..............................................................................

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351